285

# TWO LECTURES

BY

T. BHAKTAVATSALAM, B.A., M.B.P.I.,

*Author of "Krishna Chaitanya: His Life and Teachings" in Tamil,*
*"Sage of Narayanavaram" in English. Etc. Etc.*

(1) Address delivered at the Presidency College, Madras.

(2) Address delivered during a Vaishnava Conference held in Madras.

R.V. PRESS, MADRAS, N-C

# செந்தமிழ்ப் புதுவள நந்தன வனவியல்

அல்லது

# செந்தமிழிலக்கியம் செம்மைபடைவ[illegible]

---

தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் மொழியிலே பயின்று தமிழ் அபிவிர்த்திக்கென்றே உழைத்து எல்லாம் தமிழ் மயமாகவே இன்புருக்கொண்ட அன்பர்களே!

மக்கட் பிறப்பிற் றோன்றினா ரனைவர்க்கும் ஒக்க முடிந்து உறுதிபயக்குமெனக் கொள்ளப்படுவனவற்றுள் சுயதேசாபிமானமும், சுயபாஷாபிமானமும் வெகு முக்கியமானவை. சுய பாஷாபிமானமென்பது சுய தேசாபிமானத்தில் ஒருவாறாய் அடங்கி விடுவதாதலால், நமது தற்கால அவசரம் நோக்கிப்பெரும்பாலும் இரண்டையும் ஒன்றாகவே கொள்ளக்கூடும். நமது சுயபாஷை யென்றாலும் நமது தாய்ப்பாஷை யென்றாலும் ஒன்றுதான்.

சுயபாஷையும் அன்னியபாஷையும் இன்னவென முதலில்நாம் அறியவேண்டும். வயது முதிர்ந்த பின்னர் அன்னியரிடத்திருந்தோ அல்லது அவர்கள் பேச்சிலும் எழுத்திலும்தேர்ந்த நம்மவரிடமிருந்தோ வருந்தி முயன்று, இராப்பகலாய்க் கண்ணைப்பதித்தும் கருத்தைச் செலுத்தியும் ஒருவேளை காதலித்தும் ஒருவேளை கலக்கமுற்றும் விழுந்தும் எழுந்தும் கற்றுக்கொள்வது சுயபாஷையாகாது. வேறு எது சுயபாஷையாகுமெனின் நாம் எந்து குழந்தையாயிருக்கும் போதே நம்மைத் தொட்டிலிலும் கட்டிலிலும் வளர்த்தி மார்போடணைத்துத்தம் ஆர்வத்தால் வளைத்துப் பாலூட்டிச் சீராட்டித் தாராட்டிக் கொஞ்சிக்குலவி முத்துமுத்தாடிப் பாலோடு சேர்த்தே பதங்களைப் புகட்டிய தாயாரையே குருவாகக்கொண்டு, அன்று முதல்படிப்படியாய் ஓங்கி வளர்ந்து பாங்குபெற வமைவது ஒருவனுடைய சுயபாஷையாகும். வெளிவிவகாரங்கட்கு மாத்திரம் ஒளி பெறத்துலங்கி அனேகமாய் வீட்டிற்கு வந்ததும் கோட்டைக் கழற்றி யெறிவதுபோல் விலக்கப்படுவது அன்னிய பாஷை: பெரும்பாலும் உள்ளும் புறமும் ஒரே வழிப்பட்டு நினைவிலும் பேச்சிலும் நேர்மையாய் நின்று எங்கும்ஒரேவித இயல் புடைத்தாகி நம் உடம்

631,6x

பில் தசையும் நரம்பும் தோலும் என்பும்போலச்சொந்தமாய் நின்று ஆனந்தம் விளைப்பது சுயபாஷை. அன்னியரிடம் பயிலவும் அன்னியர் தொழில்களைக் கவனிக்கவும், அன்னியர் தரும் பெறலரும் பொருள்களைப் பெற்றுய்யவும் நாம் அத்தியாவசியமாய் அறியவேண்டியது அன்னியபாஷை: நம்மவருள் உற்றாரோடும் பெற்றாரோடும், மனைவியோடும் மக்களோடும், கற்றாரோடும் கல்லாரோடும் பிறப்பிலும் இறப்பிலும் வாழ்விலும்தாழ்விலும் சர்வ சாதாரணமாய் உபயோகப்பட்டு அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்து உன்னதப்படுத்துதற்கும் அல்லது பின்னுக்குத் தள்ளிப் பிரேதம்போலாக்குதற்கும் ஏற்ற பொருளாயிலங்கி நிற்பது சுயபாஷை. சுய இலக்கிய இலக்கணநூல்கள் வளருந்தோறும் வளறுந்தோறும் சுதேசமும் சுதேச நடையொழுக்கங்களும் சீர்மையடைந்து செவ்விதில் விளங்கும். சுதேசிகள் சுயபாஷையை அசட்டை செய்வார்களானால் அன்றே அப்போதே அவர்களுடைய கேட்டைத் தேட மூட்டைக்கட்டிக் கொள்வார்கள்.

## அபிமானம் என்பது யாது?

அபிமானம் என்பது—யாம் எதன் பால் அன்பு செலுத்துகின்றோமோ, அதனை முன்னர் நன்கறிந்து, உள்ளதை யுள்ளபடியுணர்ந்து, பின்னர் அதன் குறை பாடுகளைக் கூடுமானவரையில் விலக்கிக் கொண்டு நிறைவு படுத்த முயல்வதே நல்லபிமானமாகும். நொள்ளைக் கண்ணனைச் செந்தாமரைக்கண்ணனென்பதும், மொட்டைத் தலையினளைக் கூந்தலழகி யென்பதும் கட்டை வெட்டியைக் கம்பனுக்கு வாத்தியாரென்பதும் சரியான அபிமானமல்ல. நமது பிள்ளை துன்மார்க்கத்தனங் கொண்டு சன்மார்க்கம் விலகுவானாகில், அவனைச் சாமபேத தான தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களாலாயினும் வேறெவ்விதத்தாலாயினும், இன்மொழியாலேனும் வன்மொழியாலேனும் சரிப்படுத்த முயல்வதே பெற்றோர் கடமையாக, அதைவிடுத்து, "வீட்டிலடக்காத பிள்ளையை ஊரிலடக்கி விடுவார்கள்" என்னும் பழமொழியை மறந்து பிள்ளை பிடிக்கிற சண்டைக்கு அப்பனே அதிதேவதை போல் சென்று, தன் மகனிடம் காணலாகாத உத்தம குணங்களை அவன்மீது மெத்தவும் ஏற்றிப் பிறரைத் தூஷிப்பது சரியான அபிமானமென்று எவர் தாம் சொல்லத்துணிவர்? இதைப் போலவே, நம் தேகத்தில் ரோகம் காணுமாயின்,

ஆடைகொண்டு அதனை மூடிவைத்துக் கையைக் கொண்டு மெய்யது பொத்தி மனதைக்கொண்டு மனப்பால் குடித்தால், உள்ள நோயும் உபத்திரவம் செய்யாது மெள்ள நகர்ந்து விடுமா? விடாது.

அது போல், நாம் ஒரு விஷயத்தில் அபிமானம் வைத்திருந்தால், அவ்விஷயத்தின் குறைபாடுகளை நன் குணர்ந்து அவைகளை நிவிர்த்திக்கும் வழியைத் தேடி அதை உன்னத நிலைக்குக் கொண்டு வரல் வேண்டும். இதுவே உண்மை அபிமானிகளின் அரிய பெரிய கடமையாகும்.

இஃதிவ்வாறாக சிலர்,

## அபிமான மின்மை

யென்னும் நோயால்வருந்தி காமாலைக் காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுவது போல், நல்ல விஷயத்தைச் சொன்னாலும் அல்லவென்றே அடம்பிடிப்பார், கையிலுள்ளதைக் காட்டினாலும் கண் கட்டிவித்தை யென்பார், கம்பன் கருத்து நன்றாயிருக்கிறதேயென்றால் வம்பன் வம்பன் அவனுக்கென்னதெரியும், அவன்முதல் பாட்டில் முந்நூறு குற்றமுளவே யென்பார், பிறர் நல்லது என்பதை யெல்லாம் பொல்லாதது என்று சொல்வதற்கே கங்கணங்கட்டிக் கொள்வார். உண்மையில் யாதொரு நோயுமில்லா திருக்கவும் ஊரிலுள்ள நோயெல்லாம் உருண்டு திரண்டு, ஒரே நாராயணாஸ்திரம் ஒன்பது கோடியான புராண கதைப்படி ஒன்று, பத்து, நூறு, கோடியாய்ப் பரிணமித்துத் தன் உடலத்தில் வியாபித்து உபத்திரவப் படுத்துகின்றன வென்று மருளும் பிரமை வியாதிக்காரன் Hypochondriacal Person போன்று அபிமானமில்லாத அசடன், எதைப்பார்த்தாலும் அதிலுள்ள குற்றத்தையே கண்டுபிடிப்பதோடும், இங்கிதப் பொருள்களிடத்தும், சங்கைபதித்து அவைகளை யிகழும் வங்கை பாராட்டும் அகங்காரப் பெருக்குஅவனிடம் எந்நேரமும் குடிகொண்டிருக்கின்றது. இவ்வாறு அபிமான மில்லாதவன், சுதேச சுயபாஷாவிஷயங்களிலும் அவ்வாறிருப்பின் அவன் இழிதகவு இன்னதெனக் கூறவேண்டாதாகிறது.

சுதேச சுய பாஷாபிமான மில்லாதவன் அருளில்லாத நெஞ்சத்தன்; அழுக்காறு பொதிந்த உள்ளத்தன்; அறுந்த விரலுக்கும்

சுண்ணாம்பு கொடாத அகங்காரி; தங்கு தடையின்றி அங்குமிங்குந் திரிந்து ஊராரிடத்திற்போராடி உள்ளபொருளைக் கொள்ளைகொண்டுதன் வயிற்றையாயினும் நிரப்பியோ, அல்லது அதனையும் ஈரத்துணியால்ஊறவைத்துக் கொண்டோசாமி சாமி யென்று கையிலுள்ளதைப் பூமியில் புதைத்துப் பூதத்தைப்போல் காத்து மனமும் புண்ணாகிக் கண்ணும் இருளாகித் தானும் கெட்டுப் பிறர்க்கும் நல்லன செய்யாது நாசமாய்ப்போகும் நீசஸ்ரேஷ்டன்; அவன் இடுக்குவது அதிக பொருளாயினும், உடுப்பதோ ஒரு முழம் வைகுண்ட சல்லாதான், கேட்டால் பேசுவதோ, கருட கம்பம்போல் ஐம்பது முழம் ஞானம் தான். அவனுக்குத் தேசத்திலும் அபிமானமில்லை பாஷையினும் அபிமானமில்லையாயினும் வெளிப்பகட்டுக்காகவும் தன்னை நால்வர் மெச்சும்படித் தன் கொள்கையைச் சரியென நிறுவி நாட்டுதற்காகவும், அவன் செய்யும் கடவாதமும் படவாதமும் அனைவரையும் கிடுகிடுக்கப் பண்ணி அங்காக்கச் செய்யும். இன்னான் தானதருமஞ் செய்வதாய்க் காட்டினும், கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைத்து உள்ள துணுக்கைகளைத் தானே கைக்கொண்டு மெள்ளநகர்வதுபோன்ற தருமமேயன்றி வேறன்று. சுருக்கமாய்க் கூறுமளவில் இவன் ஊரையடித்து உலையில்போட்டு "ஓடுமீனோடி யுறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்கிறபடி சர்வஜீவ தயாபரக் கொக்காய்ப் பிரகாசிப்பான். இப்புண்ணிய புருஷர்க்கு ஆங்கில மகா கவிகளில் மிக்க வைரியாயிருந்தவர் ஸர் வால்டர் ஸ்காட் என்பவர். இவர் தாமியற்றிய "Lay of the Last Minstrel" என்னும் அரிய பெரிய நூலின் கண் ஆறாவது காண்டத்தில் அதிக ஆவேசத்தோடும் பின் வருமாறு கூறுகிறார்:

"இது என்னுடைய சொந்ததேசம், நான் பிறந்த நாடு" என்று உள்ளுக்குள்ளே ஆனந்தப்படாத சத்தை அற்ற சொத்தை மனிதன் யாவனாயினும் உளனா? பரதேசங்களிற் றிரிந்து பின்னர் தன் வீடுநோக்கித் தன் அடிச்சுவடு திருப்பியகாலை தனக்குள்ளே இருதயம் பூரிக்காதவன் யாவனாயினும் இருக்கின்றானா? அவ்வாறு ஒருவனிருப்பானாயின் அங்கு செல்க, அவனை நன்றாகக் குறித்துக் கொள்க. அவனைப்பற்றி நல்லிசைப் புலவனெவனும் உவகை ததும்பிப் பாடுவதில்லை. அவன் பட்டங்கள் பெரியவைகளாயிருந்தபோதிலும், அவன்செல்வம் அவனுடைய ஆசையையும் அடக்கித் திருப்திதரத்தக்க அத்துணை வரம்புகடந்ததாயிருந்த போதிலும், அவ்

விதபட்டங்களுக்கும், அதிகாரத்துக்கும் ஐஸ்வரியத்திற்கும் யாதொரு மதிப்பு மேற்படாது சுயகாரியதுரந்தரனாகத்தன்னில் தானே சுழன்று நின்ற அப்பாதகன் உயிர் வாழும்போது உண்மையான கீர்த்தியை இழந்தவனாவான், பின்னர் இறக்கும்போது மண்ணுக்கிரையாகி மண்ணுடம்பை யிழந்தும் அவனுக்காக யாரும் பிரலாபியாமலும், அவனை யாரும் கனப்படுத்தாமலும், அவன் புகழை யாரும் பாடாமலு மிருப்பதால் புகழுடம்பு படைக்காமல் அதையிழந்தும் இருமுறையிறந்தவனாவான்.--இவ்வண்ணம் இரும்புகழ்படைத்த பெருந்தகைப் புலவராகிய ஸர் வால்டர் ஸ்காட் என்பார் சன்னதங்கொண்டு கூறிய உன்னத மொழிகளின் உண்மையையும் உயர்வையுங்கண்டு அறிந்து அதற்குத்தக ஒழுகுதல் அறிவாளிகளுடைய அரும்பெருங் கடமையாகு மென்பது நாம் சொல்லாமலேயமையும்.

## தமிழபிமானம்.

நமது சுயபாஷை தமிழ். தமிழைச் சுயபாஷையாகக் கொண்ட ஒவ்வொருவரும் அதை மிகப்பெரிதும் அபிமானித்து அதனிடத்துள்ள நவரசங்களையும் நன்றாய் அனுபவித்து இன்னுங் குறைகளாயிருப்பன வற்றைப் போக்க முயன்று ஒழுகுதல் வேண்டும். அவ்வாறு செய்தால், தமிழையே பேசி நடையாடும் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு அறிவு அபிவிர்த்தியாவதோடும், குழந்தைகளுக்குக் குருவாய் ஏற்பட்ட நமது பெண் மணிகளுக்கும் ஞானம் உதயமாய் நல்ல சீர்திருத்தங்களெல்லாமே நாலு நிமிஷத்திற் கைகூடும். நாம் ஆங்கிலம் படித்த மாத்திரத்தானே "டாம், நான்சென்ஸ் டர்டி வெர்னாகுலர்ஸ், அன் டல் ஹெடட் வில்லேஜர்ஸ்" என்று அவமதித்தல் அடாது. ஆங்கிலம் படித்தபயனை அருந்தமிழிலுஞ் சிறிது நுழைத்தற்கு வேண்டிய அபிமானமும் சக்தியும் நம்மவரில் உண்டாக உண்டாகத்தான், ஆங்கில ராஜ்யத்தின் அன்பும் ஆதரிப்பும் நன்குவிளங்கும். பிராமணர்களுக்குத்தமிழபிமானம் வேண்டியதில்லை யென்றும், அவர்களுக்குச் சுயபாஷை ஸம்ஸ்கிருதம் என்றும் பலர் பற்பலவாறு தப்பபிப்பிராயங்கொண்டு பேச யான் கேட்டிருக்கிறேன். அனேக ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஒருவேளை வேறு பாஷையிற் பேசியும் பயின்று மிருக்கலாமென்னும் யூகையைக் கொண்டே, நமக்கு இப்போதும் அதுதான் சுயபா

ஷை யென்று கொள்வது அருவருக்கத்தக்க காரியம். தென்னாட்டுப் பிராமணர்கள் அனேகர் திவ்யப் பிரபந்தத்தையும் தேவார திருவாசகாதிகளையும் ஆர்வத்தோடும் அமைதியோடும் வாசிப்பதன்றியும், கோயில்களில் ஆழ்வா ராதிகளையும் நாயன் மார்களையும் பூசிக்கிறார்கள். வீட்டிற்கு வந்ததும் ஸம்ஸ்கிருதம் பேசாது, மனைவியோடும் மக்களோடும் உற்றார்களோடும் உறவினரோடும் பேசுவதும் அளவளாவுவதும் தமிழிலேயாய்த் தானிருக்கிறது. ஆகையினாலே இவர்களது சுயபாஷையும் தமிழ், இவர்களபிமானிக்க வேண்டியதும் தமிழ் என்று முடிவுரை கூறுவதில் என்ன வழுவிருக்கிறது! இதை விடுத்து ஆரம்பத்தை நோக்கி மற்றொன்று கூறுவது, பரிமாணக்கொள்கைப்படி, நாமனைவரும் மனித இலக்கணம் விடுத்து மற்றொரு இலக்கணம் பூண்டு அவ்வாறே நடந்து காட்டவேண்டுமென்பது போலிருக்கிறது. இஃதன்றியும், நமது ஆதமும் ஏவாளும்— அதாவது நமது முதற் பரம மூதாதைகள் ஒலித்த ஒலிகள் இன்னபாஷையின் பாற்படுவனவென்று இன்னும் ஏற்படாதிருப்பதையும் நாம் கவனித்தல் வேண்டும்.

இது நிற்க, நமது அமிழ்தினுமினிய தமிழ் மொழிக்கு சிங்காரம் மிகுந்த அலங்கார நந்தவனம் நாமொன்று புதிதாய் அமைப்பதன் முன்னர், பண்டைக்காலந் தொடங்கிப் பல்லாயிரம் வருடங்களின் காற்றிற்கும் மழைக்கும் அனலுக்கும் அபாயங்களுக்கும் தப்பியும் அல்லது ஒருவகையாயிருந்தது பலவிதமாய் மாறுபட்டும் இப்போது நாம் காண்கிற

## திந்தமிழ்ப் பூந்தோட்டம்

எவ்வண்ணம் விளங்குகின்றது என்பதை வெகு சிறிதாயினுங் கவனித்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

ஹா! ஹா! அதனுடைய அழகும் அமைப்பும் நனிமிகப் பெரிதே! அதனுடைய அளவும் எல்லையும் அயனாலும் கூறலாகாத அவ்வளவு விஸ்தீர்ணமுள்ளதாய் அஃது விளங்குகின்றது. அப்பூங்காவின் உட்புறத்தினோர்பால் அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், மந்தாரம், பாரிசாதம் என்னும்வந்திக்கத்தக்க ஐந்துபெரும்விருக்ஷங்களாய் ஐம்பெருங் காப்பியங்கள் விளங்குகின்றன. அவைகளே சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

என்பன. அவைகளின் நிழலில் கொழுத்துத் தழைத்துப் பழுத்துப் பூத்த அனேகஞ்செடிகளும் கொடிகளும்மரங்களும் காணப்படுகின்றன. இவ்வித அற்புதமாடும் பொற்பிணைவிட்டு இன்னோர்புறம்செல்லவும், ஆங்கே, மனதைபிழுத்து மாயஞ்செய்து சல்லாபஞ் செய்யும் பொல்லாத மல்லிகையாகவும், இல்லையே என்னாத முல்லையாகவும், சோகந்திர்க்கும் அசோகமாகவும், ஏதம்நீங்க ஓதினர் தம்மையும் வாதனை செய்யும் சூதமாகவும், காமரை வெருட்டும் தாமரையாகவும், கன்மனம் படைத்த மன்மதனுடைய பஞ்சபாணஸ்வரூபங்களாய்க் கோவைத்துறைகளும் பற்பல கீர்த்தனைப் பதங்களும் சூழ்ந்து கிடக்கின்றன. இழுத்தமனதையும் அழைத்துக்கொண்டே பிறிதொரு பக்கம்போக, அவ்விடத்திலே, என்னையும் விழுங்கி என் மனதையும் விழுங்குவேனென்று நன்றேயியற்றும் கொன்றை மாமலராகவும், களவுசெய்த கண்ணனைக்காண உளவுகாட்டி உறுதிகூறும் துளவச்செடியாகவும், ஆத்தியாகவும் அலரியாகவும் பத்திரமாகவும் புஷ்பமாகவும் பற்பல விதமாய் உற்பவித்துள்ள திவ்வியப் பிரபந்தமும் திருவாசகமும் தேவாரமும் திருவருட்பாவுமாய் அனேகம் தரிசனமாகின்றன. அங்கு நின்றும் சற்றுத் திரும்பினால் அப்பூந்தோட்டத்தின் நடுமையத்தருகில் ஆலமரம் போன்று மகா பெரிய விருக்ஷமொன்று தெரிகிறது. அதோ அண்ணாந்து பார்த்தால் ஆகாயத்தை அளாவுகிறது, குனிந்து பார்த்தால்,பாதாளத்தளவும் போய் முன்னரும் பின்னருமாக வேரோடிச்சென்று பூமியைப் பிளந்த சாமியை யொத்திருக்கிறது. அதனிடம் எல்லாப்பூக்களும் உல்லாசமாய்ப் படர்ந்து சொல்லவொண்ணா அழகைத்தருகிறது. அதன் அடிவாரத்தில் குழிந்து இழிந்த பள்ளமானது ஜலாதாரங்கொண்டு நிலாவுவதால் ஆங்கே கமலமும் குமுதமும் விமலமாய் விளங்கவும், அம்மரத்தின் உடலிலும் இலையிலும் கிளையிலும் வீழ்திலும் தொற்றித் தொடர்ந்து பற்றிப்படர்ந்து எல்லாப்பூக்களும் உல்லாசமாய்ப்பரிமளிக்கவும், போதும்'போதா' தற்கு ஆகாயத்தில் விளங்கும் நக்ஷத்திரங்களும் மரத்தினுடைய அதிகப்பிரகாசமான பூக்களாகச் சொலிக்கவும், எல்லா வனப்புகளுமமைந்த அவ்வரிய பெரியமரமே தனக்கு ஒப்பாரு மிக்காருமில்லை யென்னும்படி ஓங்கி யுலகளந்த திங்கவிக்கம்பனுவது. இஃதல்லாமலும், வேறு வேறு உன்னதமாகிய சின்னஞ் சிறுசெடிகளும் அங்குமிங்குங் காணப்பட்டபோதிலும் பொதுவாய் நமது நந்தவனம் பன்னெடு நாளாய்க் கவனிப்பாரில்லாது அவலமுற்றுப் போயிருக்கிறது.

இடையிடையே முள்ளும் முரடும் கல்லும் கரடுமாகப் பாதை
யுமின்றிப் பண்படுத்துவாரு மின்றி, நமது தோட்டம் முழுவதும்
வாட்டமுற்றிருப்பதைக் காண்கிறோம். சிங்காரவனத்தையலங்கரிப்
பார்போற் றொடங்கி நாகதாளியை வெட்டி நடுநடுவே யிறைத்து
வைத்தால் எடுத்தகாரியத்தை முடித்ததாகுமா? பாரதக்கதையைப்
பதினாயிரம்விதமாகவும் ராமாயணக்கதையை லக்ஷம்விதமாகவும்,
விருத்தத்தி லிருந்ததை வெண்பாவிலும், வெண்பாவிலிருந்ததை
விருத்தத்திலும், பாட்டிலும் வசனத்திலுமாகப்பற்பலவாய் மாற்றி
மாற்றி, யாதொருகற்பனாசக்தியு மின்றி, சொன்னயமின்றிப் பொரு
ளைய மின்றி அல்லற் படுத்தி ஆனந்தமுறுவது சரியான இலக்கிய
மாகுமா? சாத்துக்கவியும் சரமகவியும், மும்மணிக்கோவைகளும்,
நான்மணி மாலைகளும், பதிற்றுப்பத்தந்தாதிகளும், பதிகங்களெண்
ணிலாதனவுமாக நம் காதைக்கடித்துக் கலக்கமுறப்பண்ணுவனவே
யன்றி, நம் இலக்கியம் வளர்ந்தபாடில்லை. நம் இலக்கியம் இன்னும்
விர்த்தியடைந்து நம் நாட்டாரனைவரும் நற்பலன் துய்க்க வேண்டு
மாயின்,

## அன்னிய நாட்டுச் சரக்கும் அவசியம் வேண்டும்.

இப்போது சில நூற்றாண்டுகளாக, நாம் அபிவிர்த்தியென்ப
தற்கே வெகு சிறிதும் இடந்தேடாது, சொன்னதைச் சொல்லுங்
கிளிப்பிள்ளைபோலவும், பேசினதையேபேசி எழுதினதையே எழுதி
விழுந்துகிடக்கிறோம். ஆங்கிலம் முதலிய சில ஐரோப்பிய பாஷை
கள் அதிகமாய் விர்த்தியடைந்து, விஞ்ஞான சாஸ்திர வழிகளிலுஞ்
சரி, இலக்கிய இலக்கண நெறிகளிலுஞ்சரி, எங்குபார்த்தாலும் நூத
னக்கருத்துகளும், நூதனக்கருவிகளும் கண்டு பிடித்து நுட்பமும்
மேன்மையும் காட்டுகிறார்கள். அவ்வித இலக்கியங்களிலும், விஞ்
ஞான ஆராய்ச்சிகளிலும் பழகிய நம்மனோர்களும் அக்கருத்துகளைச்
சிறிது சிறிதாகவேனும் நம் இலக்கியங்களிலும் நுழைக்க வேண்டி
யது அத்தியாவசியமாயிருக்கிறது அக்கருத்துக்கள் மாத்திரமே
யல்லது அன்னிய பதங்களையும் அவ்வக்காலங்களி லுபயோகிக்க
வும் அவசியம் நேரிட்டிருக்கிறது. உதாரணமாக Soap என்னும்ப
தத்திற்கு மாறாகவேறெந்த சுத்தத்தமிழ்ப்பதத்தை நாமுபயோகித்
தாலும் உண்மைப் பொருளைக்காட்ட உறுதி யதற்குப் போதாது
நிற்கிறது. இந்த நியாயங்கொண்டே, அனேகம் வடமொழிப்பதங்

OFFICE OF THE ... 30 OCT 1911 MADRAS.

களை நாம் ஏற்கவே கைக்கொண்டிருக்கிறோம். இதுபோலவே சில ஆங்கிலப் பதங்களையும் நாம் அவசியம் தமிழுக்குள் இணைத்தால் கால தேச வர்த்தமானங்களுக்கியைய நாம் கனப்படுத்தப் படுவோம். இல்லையேல், கிணற்றிலுள்ள ஆமை கிணற்றைக்காட்டிலும் வேறு பிரபஞ்சம் கிடையாது என்று மருண்டு மனப்பால் குடித்தது போல் நாமும் வீண்திருப்தி பண்ணிக்கொண்டு விருதாவில் காலங்கழித்தவராவோம். இச்சென்னைமாநகரில் இலக்கிய இலக்கணங்களில் மிகவும் வல்லுநரெனப் பெயர் படைத்திருந்து சின்னாட்களுக்கு முன்காலஞ் சென்ற ஒருவர் ஒரு சமயம் என்னை விளித்து "என்ன ஐயா! நீங்கள் படித்த விஞ்ஞான சாஸ்திரங்களில் நம் ஊரில்லாதனவும் நம் எட்டில்லாதனவுமாகிய உண்மைகள் என்ன கூறப்பட்டிருக்கின்றன? இஞ்சின் இயற்றும் முறைகளும், திராவகம் இறக்கும் வழிகளும், பரகாயப் பிரவேசஞ்செய்யும் பக்குவங்களும் எல்லாம் நமது புத்தகங்களில் பரக்கக் கூறப்பட்டிருக்கின்றனவே" யென்றார் "அந்தோ! அவைகள் எங்கே" யென்று கேட்டேன். "எல்லாவற்றையும் மூட்டைக்கட்டி எட்டுரூபமாகக் குவித்துப் பூட்டுப் போட்டு வைத்திருக்கிறார்கள். கேட்டால் கொடோம் என்கிறார்கள்" என்றார். இதைப்போல், எல்லாம் நம்மிடமுள்ளன, நம்மைக்காட்டிலும் பெரியோர் யாருமிலர் என்னும் வீணகங்காரம் படைக்காமலும் அஞ்ஞானத்தி லழுந்தாமலும் நின்று உண்மையறிய முயலுவோமாக! பிறபாஷைப்பதங்களை நம் இலக்கியத்தில் நுழைப்பதில்,

## அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் விஷமாகும்.

நமக்குதற்காலவிவகாரங்களுக்கும் எடுத்தகாரியத்திற்கும் எவ்வளவு அவசியமோ, அதைக்கவனித்து அன்னிய பதங்களைப் பிரயோகிக்கவேண்டும். அனவசியமாகவும், ஆடம்பரத்திற்கென்றும், அன்னிய சொற்கள் உபயோகித்தல் அழகான காரியமன்று.

ஆங்கில பாஷையிலும் Latin, Greek முதலிய பல பாஷைகளிலிருந்து பதங்கள் கடன் வாங்கப்பட்டிருக்கின்றன. நம் தமிழ்ப் பாஷையிலிருந்தும் 'முளகுத் தண்ணீர்' என்னும் பதத்தை எடுத்து "முளகு டானி" என்று உபயோகிக்கிறார்கள். சந்தர்ப்பம் நேரிட்டாலொழிய Latin, Greek பதங்களைக்கூடியவரையிலும் குறைத்துக் கோடலே சால்புடைத்து-என்று அநேக ஆங்கில மேதாவி

கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதுபோலவே, நாமும் அன்னிய மொழிகள் நம் பாஷையில் இயற்கைப்பெருந்வன்மையா லிணைக் கப்படும்வரைக்கும், அன்னிய பதங்களை நுழைப்பதில் அதிக ஜாக் கிரதையாகவே யிருத்தல் வேண்டும். பிறமொழிகளைப் பிரயோகியா திருப்பதும் பிசகு; கண்மூடிக்கொண்டே, கண்டபடியாக எண்ணிக் கையில்லாமலுபயோகிப்பதும் பிசகு. இவ்விதமாக அன்னிய பா ஷைகளிலிருந்து அரிய கருத்துகளையும் உரிய மொழிகளையும் உபயோகிப்பதால், நாம்,

பிச்சையெடுத்து லச்சை கெட்டவராகோம்.

நாளுக்குநாள் நாகரீகம் முதிர்ந்து, அறிவும் அபிவிர்த்தியாகித் தப்பபிப்பிராயங்கள் கொள்ளாமலும், தப்பு நியாயங்கள் பேசாம லும் தப்பு விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாமலும் கேவலம் சுயகாரிய துரந்தரராய் நில்லாது, சுய நன்மையையும் பரோபகா ரத்தையும் நாடிச்செல்வதற்கு ஆங்கிலம் பயிலாத நாட்டுப் புறத் தோர்க்கும், அடுப்பங்கரையிலடங்கியும் மாமி நாத்திக்கொடுங்கியும் அறிவு முடங்கியும் பழைய வழக்கங்களில் அழுந்தியிருக்கும் பெண் களுக்கும் அஃது ஒரு பெரிய ஞானதீபத்தைக் காட்டுவதைப்போ லிருக்கும். நாம் அடிக்கடி பற்பல தேசங்களிற் சஞ்சாரஞ் செய்து பற்பல உண்மைகளை யறிந்து ஒழுகநேரிடும் பலன்களை யெல்லாம், அவ்வத்தேசங்களின் அற்புதப் பெரியோர்களுடைய அற்புத எண் ணங்களை யறிவதனால் வெகு சுலபத்தில் கைக்கொள்ளலாம். விஞ் ஞான சாஸ்திர வழியாகத் தருக்க விரோதமின்றி, ஒன்றைப்புதி தாய் உத்தேசித்து உறுதிகொண்டு, அனுபவரீதியில் அதற்கு மா றுன சம்பவங்களில்லையாவெனப் பன்னெடுநாள் கவனித்து ஒரு கொள்கையை நாட்டுதல் போன்ற பழக்கங்களிற்படிவதினாலும், நம் மனம் தூய்மையடைந்து வாய்மையை நாடி மேலும் மேலும் விர்த் திக்குவரும். இப்போது சீர்கெட்ட ஆசாரங்களென்று நாம் கூவிக் கூவி விலக்க முயன்றும் பலன் தராதிருக்கும் குறைகளெல்லாம் நீங்கி வெகு சீக்கிரத்தில் சீர்திருத்தங்க ளெல்லாம் நேர்மையாகவே விளைந்து அதிக நன்மையுண்டாகும். இதற்கெல்லாம் தற்காலம் தமிழில்,

வசன நூல்களே வெகு உசிதம்.

இனிமேல், பாட்டுகள் பாடச்சக்தியில்லா திருப்பவர்கள் பாட் டுப்பாடியழுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. அபிப்பிராயங்களிலும்

அழகிய கிதமிருக்கவேண்டும், சொற்களும் மிகுந்த சுவையமைந்திருக்க வேண்டும். இரண்டும் இல்லாதவர்கள் கவிபாடுதற்குச் சுதந்தரமில்லாதவர்கள் என்று கண்டிப்பாய் கூறுகிறார் கார்லைல் என்னும் ஆங்கிலப்புலவர். வசனநூல்களியற்றுவதில் நம் தமிழர்கள் மிகவும் பின்னிடைந் திருக்கிறார்களென்பது அனேக அறிவாளிகளுடைய கொள்கை. நம்மனோர் இப்போதியற்றும் வசன நூல்களிருவகைப்பட் டிருக்கின்றன, இலக்கிய இலக்கணப் பழக்கமே யில்லாது மேதக்க உணர்ச்சி வெகு சிறிது மில்லாது அற்பர்கள் மாத்திரம் படித்து ஆனந்தப்படும் வண்ணம் அந்த சந்தமில்லாத ஆபாசநூல்களை அனேகரியற்றுகிறார்கள். இக்கருநிறக் காக்கைகள் நம் பூங்காவனம் முழுமையும் நீங்காவண்ணம் முட்செடிகளையும் என்பிறைச்சிகளையும் இறைத்து விடுகின்றன. வேறு சிலர், ஆதிகாலத்தில் அகஸ்தியரோடேயே அளவளாவிப்பழகினதுபோல், தற்காலத்தில் தமிழ்ப்பாஷை ஓங்கிவளர்ந்திருக்கும் நிலைமையைச் சற்றும் கவனியாமலும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்னும் விதியின் உண்மையை யோராமலும் இலக்கணத்தில் "வழுவமைதிகள்" என்று வந்தவற்றின் சூக்ஷமம் இன்னதெனக் கண்டுணராமலும் கருந்தமிழில் கொடுஞ்சந்தி சேர்த்து பண்டைய நடையில் கொண்டாட்டம் போடுகிறார்கள். இவ்விரண்டையும் விடுத்து, இக்காலத்திற்கிசைந்த வண்ணம் தெள்ளிய நடையில் ஒள்ளிய பொருளையமைத்து வசனநூல்களெழுத அறிவிற் பெரியாரொவ்வொருவரும் விரைவில் முயலவேண்டும். இவ்விதமாக நாம் எழுத முயலுங்கால்,

## இலக்கியம் இருவகைத்து

என்று தாமஸ் டிக்வின்ஸி என்னும் ஆங்கில பண்டிதர் கூறுவதைக் கவனித்துச் செல்லவேண்டும். இலக்கியம்அறிவிலக்கியம் (Literature of Knowledge) எனவும் சக்தியிலக்கியம் (Literature of Power) எனவும் இருவகைப்படுமென்று அவர் கூறுகிறார். அறிவிலக்கியமாவது, விஞ்ஞான ஆராய்ச்சியடியாகப் பிறந்தகொள்கைகளை விவரிக்கும் நூல். இது ஒரே நிலைமைத்தா யிராது, அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கும். சாதாரண அறிவிலக்கியத்தைவிட மிக வுயர்ந்து என்றும் மாறிமாறிப் பொன்றுதலில்லாது உண்மைகளை யனுஷ்டித்து உயர்வடையும்படி மனிதர்களை உற்சாகப் படுத்தும் உன்னத நூல் சக்தி யிலக்கியத்தின்பாற் படுவது.

இதைச் சேர்ந்தநூல்கள் ஹோமர், ஷேக்ஸ்பியர், காளிதாஸன், கம்பன் போன்றவை. அறிவிலக்கியமாவது நமக்குப் புதுப் புது உண்மைகளை விவரிக்கக் கூடும். ஆனால் நேற்று உண்மையா யிருந்தது இன்று பொய்யாகும்போது ஒழிந்துபடும். சக்தியிலக்கியமாவது நமக்கு அனேக உண்மைகளை நேராகப் புகட்டாவிடினும், நம்மைத் தூக்கிக் கொண்டே நல்ல வழியிலுய்ப்பதற்கு என்றென்றும் வல்லதொரு கருவியாகும். அறிவிலக்கியத்தைச் சுக்கானுக் கொப்பிட்டால் சக்தியிலக்கியத்தை பாய் மரத்திற்கு ஒப்பிடலாம். நாவல்களும் நாடகங்களும் வீரகாவியங்களாகும் பாரகாவியங்களும் (Epic Poetry) கல்லாகிய நெஞ்சைக்கனிவித்து இரும்பாகிய மனதைக் கரும்பெனமாற்றும் தோத்திரமாலைகளும் வாழ்த்துப்பாட்டுகளும் சக்தியிலக்கியத்திற் சேர்ந்தவைகள். வானசாஸ்திரம், பூதத்துவசாஸ்திரம், ஜீவதத்துவசாஸ்திரம் மனோதத்துவசாஸ்திரம் முதலிய விஞ்ஞான சாஸ்திர உண்மைகளையும் தத்துவ சாஸ்திரங்களின் கோட்பாடுகளையும் விவரித்து எழுதப்பட்ட நூல்கள் அறிவிலக்கியத்திலடங்குவனவாகும். மேற்சொன்ன அறிவிலக்கியம், சக்தியிலக்கியம் என்னு மிரண்டினுடைய தன்மையும் பொருந்தும்படி சில நூல்கள் நாம் எழுதக்கூடும் என்பது எம்முடைய கொள்கை. அவ்வகையான புஸ்தகங்களால் நமக்குப் பெரும்பயனுண்டாகு மென்று எமக்குத் தோன்றுகிறது. இதுநிற்க, பொதுவாய்,

## ஆராய்ச்சி வியாசங்கள்

## (CRITICAL WORKS)

நமக்கு மருந்துக்காயினும் கிடையா. மதச்சண்டையால் மாளாத கூக்குரலிடுவதற்கும், துவேஷ புத்தியால் உள்ளதை யில்லதென்றும் இல்லாததை யுள்ளதென்றும் பச்சைப்பொய் கூறி இச்சகம் பேசுவதற்குமானால் 'நான்வருகிறேன் நான்வருகிறேன்' என்று அவாக்கொண்டு சவாலிட்டுத் தயாரென வந்து விடுவார்கள். இத்தகையபடிப்பாளிகள் எதிலும் அரைகுறையா யிருப்பவரல்லர். பகைமைபாராட்டுவதானால் ஒருநூல் முழுவதுங் குற்றமேயென்றும், ஒன்றைப் புகழ வேண்டியதானால் அயர்வும் ஆயாசமுமில்லாமல் அதுமுழுதும் வெகு உயர்ந்ததே யென்றும் ஊக்கங்காட்டிப் பேசுவார்கள். அம்மம்ம! கொடியர்! கொடியர்!

"போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடிற்
றூற்றினும் தூற்றுவர் சொன்னசொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே"

என்னும் அழகிய பாட்டானது இவர்கட்கே வெகு பொருத்தமா யமைகிறது. இவ்வாறில்லாமல், ஒரு மனிதனைப் பற்றியோ அல்லது ஒரு நூலைப்பற்றியோ, நாம் ஆராய்வதானால், அவனுடைய அல்லது அதனுடைய குற்றங்களையே குற்றங்களென்றறியவும் சரியாயிருப்பவைகளைச் சரியெனக் கொள்ளவும் அவ்வாறு ஒரு முடிவுக்கு வந்த பின்னர் அதற்குத்தக வேண்டியவற்றையேபேசியும் வேண்டாதவற்றை விலக்கியும் ஆராய்ச்சி வியாசங்களெழுதப் பழகவேண்டும். இவ்விஷயத்தில் வெகு நன்றாய்ப் பழகினபோதிலும் அபிப்பிராய பேதங்களும் அநேகம் உண்டாகக் கூடும். இது பற்றித்தான், ஆங்கிலக் கவிவாணராகிய போப் என்பவர், ஆராய்ச்சி வியாசம் (Essay on Criticism) என்று ஒன்று எழுதியிருக்கிறார். புகழ்பாடுதலும் இகழ்வு கூறுதலும் ஆகியதொழில்களைப்பழுதற ஒருவன் இயற்றவேண்டுமாயின் அது அவ்வளவு சுலபமான காரியமன்று என்றும், அருள் வல்லபத்தால் அதிநுட்பமான விவேகத்தைக் கைக்கொண்டு அரசு செலுத்து மொருவனுடைய நோக்கத்தைக் கண்டுபிடிக்காது அது பிசகு இது பிசகு என்பது அறியாமையையே காட்டும் என்றும் அவர் அபிப்பிராயப் படுகிறார். கணித நுட்பங்களிலும் தர்க்க தத்துவாராய்ச்சிகளிலும் கடன் மடை திறந்தாலெனப் பிரவகிக்கும் இலக்கியப் பெருக்கத்திலும் நனிமிகப் பெயரும் பிரதாபமும் படைத்த ஆங்கிலர் கதியே யிவ்வாறாயின், மனதை வழிப்படுத்தி அறிவைப் பண்படுத்தும் நூலப்பியாசமே யில்லாதவர்களுடைய கதி இன்னதெனச் சொல்ல வேண்டாதாகிறது. தக்க ஆராய்ச்சி நூல்கள் எழுதப் படாமலிருப்பதால், சாதாரண சனங்கள், ஒரு மனிதனிடம் அல்லது ஒரு புஸ்தகத்தினிடம் சிலகுறைகள் காட்டப் படுவதனாலேயே முழுவதும் பிழைபாடுற்றதென்று ஐயம்கொண்டு கையாலுந் தீண்டாத தன்மையுடையவராகிறார்கள். ஆங்கில மகா கவிகளுக்குள்ளும் வெகு பிரதானமாய்க் கொள்ளப்பட்ட ஷேக்ஸ்பியர், மில்டனிடத்திலும் எத்தனை குறைகள் எத்தனைபேர்

காட்டினார்கள்! இவைகளைக் கொண்டே அம்மேதாவிகளை அசடரென்று ஆங்கில ஜனங்கள் அசட்டைபாராட்டுகிறார்களா? அவர்கள் அப்படிப் பாராட்டவில்லையென்பதும் பொதுவாக அநேகமாய் அக்கவிவாணர்களுடைய அலங்காரவிசேஷங்களைக் கவனித்து அவர்களை மஹோன்னத நிலையிலமைத்து இன்னும் பூசிக்கின்றார்களென்பதும் போன்ற விஷயங்களை நம்மனோர் மனதில் பதிப்பதற்கு மேற்சொன்னபடி ஆராய்ச்சி நூல்கள் அதிக அவசியமாவதோடும்

## தேச சரித்திர நூல்களும்

நமக்கு இன்றியமையாதன வாகின்றன. நம்மனோர் குண்டுசட்டியில் குதிரையோட்டுபவர். ஆடுகள்போல ஒருவர்பின் னொருவராக ஓடியோடி யிளைப்பவர். தாதா சொன்னாரென்றால் ஹா! ஹா! சரிதான் என்பார்கள். 'பழக்கங்கொடியது பார் பாறையினைக் கோழி கிழிக்கும்' என்கிறபடி பழக்க வழக்கங்களில் இளைப்புஞ் சலிப்புமில்லாது சொன்னதையே சொல்லிச் செய்ததையே செய்வார்கள்! நாட்டின் நன்மையும் கோராது தங்கள் உண்மை விர்த்தியையும் நாடாது உடும்புப் பிடியாய் அடம்தான் பிடித்து அல்லற்படுவார்கள். இன்னோர்க்கு எலிஜபத் சீமாட்டி எப்படி நடந்தார் என்பதையும், விக்டோரியா சக்ரவர்த்தினி வியன்புகழிதுவென்பதையும், ஜப்பான் தேசம் எதனால் ஒப்பாரு மிக்காருமில்லாது வெற்றி யடைந்தது என்பதையும், உருஷியாதேசம் என்னகுறைவினால் உருக்குலைந்து திருவிழந்து மங்கி மாசுறுகின்றதென்பதையும், அவ்வத்தேசங்களில் அவ்வக் காலங்களிலிருந்த கனவான்களும் தனவான்களும் கல்வியிற் பெரியாரும் கவிபாட உரியாரும் என்ன நினைத்தார்கள், எப்படி நடந்தார்கள், எவ்வாறு முடித்தார்களென்பதையும் போன்ற பற்பலவிஷயங்களை நம் இலக்கியத்தில் நூல்களாக எழுதுவதால் நமது பாஷை அடையும் அபிவிர்த்தியும், நூலெழுதுந்திறன் மிகுதலும், தமிழர்க்கு அறிவும் ஆற்றலும் பெருகுதலும் இவ்வளவுதானென அளவுபடுத்த முடியாது அபரிமிதமாக உண்டாகும். மேலும்,

## ஆவல்விளக்கும் நாவல்கள்

அனேகம் நமக்குவேண்டியிருக்கின்றன. மனக்கவலையாலும், வேலை மிகுதியாலும் மிகவும் காய்ந்து உள்ளம் சாய்ந்தவர்கள் தமது ஓய்ந்த வேளைகளில், கதைப்போக்காய் பொழுது போக்காய் படித்

........008.

துக்கொண்டே இயற்கை வனப்புகளையும் மனிதரின் சுபாவங்களையும் நன்கு ஆராய்தற்குக் கருவியாயுள்ளவை இந்நூல்கள். இவைகளை ஆங்கிலப்புலவோர் எழுதும் வண்ணம் அந்த சந்தத்துடன் சிந்தை மயக்கறும்படி எழுதக்கூடுமானவர் யாவரெனின், கரையில்லாக் கல்வியை அளவில்லாது பயின்று கற்பனுசக்தியால் விற்பன்னர்களாய், பொருளிலும் ஆழ்ந்தவைகளையே கொண்டு, சொல்லிலும் சுவையானவைகளையேதொடுத்து நன்கெழுதவல்ல இன்னிசைப் புலவர்களே. ஏனையோர் புலியைப்பார்த்துச் சூடிக்கொண்ட பூனையோர், நாவல்கள், கதைகள், விநோத சரித்திரங்கள் என்று, இயற்கை யொழுங்கையும் அறியாது மனிதர்களின் மனோ தத்துவங்களையும் உணராது, அனேகம் சிறு புத்தகங்கள் எழுதத் தொடங்கினர். இவைகள் சுத்தப்பயனற்றவை (Trash) என்று சொல்லத் தான் உபயோகமானவை. அந்தோ! பாட்டியம்மாள் கதை பரபரக்கக்கூறுவதுபோல், காலத்திற்கியையாததும் கற்பனுசக்திகுன்றியதும், வாக்கிய லக்ஷணம் வழுவழுப்பானதும், சொல்லணியென்பதுசொல்லாமலே மறைந்ததும், 'ஒரு ஊரில் ஒரு ராஜன்கதை'யாகிற கட்டுக்கதையை மாத்திரம் எட்டிடத்தில் முட்டுப்படும்படி இயற்றுவதில் யாதும் பிரயோசனமில்லை. ஆகையால், தமிழிலக்கியத்தை விர்த்திக்குக் கொண்டுவரமுயலும் நம்பனோர், ஆங்கிலத்தின் அழகிய நாவல்களை நன்குவாசித்தும் தமிழிலக்கிய அணிகளிலும் சொற்றிறனிலும் தேர்ச்சிபெற்றும், நவீன நாவல்களெழுதத் தொடங்கினல் பெரிதும் பயன்றரும். இவைகளல்லாமலும்,

## விஞ்ஞான சாஸ்திர விளக்கம்

நமக்கு மிகப்பெரிதும் வேண்டியிருக்கிறது. நாம் இதுகாறும் ஆகாயக் கோட்டைகட்டி அந்தரத்தில் விளக்கேற்றி வந்திருக்கிறோம். நினைத்ததெல்லாம் பேசுவதும் பாவித்ததெல்லாம் உண்மையென்பதும் நமக்குச்சர்வ சாதாரணமாய் விட்டது. இவ்வாறு கடிவாளமில்லாது துடிப்போடு ஓடுகிறகுதிரையை அடக்கி நிறுத்துவதற்குத் தக்க உறுதியான கயிறுய் மேற்படி விஞ்ஞான சாஸ்திரங்கள் விளங்குகின்றன. இவைவானதத்துவ சாஸ்திரம், ஜீவதத்துவ சாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரம், பூதத்துவசாஸ்திரம், க்ஷேத்திரகணிதம் எனப் பலவகைப்படும். இவையல்லாமலும் தர்க்க சாஸ்திரங்களும்

ஆங்கிலத்தில் அநேகமுள்ளன. இவ்வரியபெரிய கருத்துகளையெல்லாம் நேர்மொழிபெயர்ப்பாகவேனும், அல்லது சுருக்கமாய் சிறிய புத்தகங்கள் வடிவாகவேனும் அழகிய கதைகள் மூலமாயும் வியாசங்கள் மூலமாயும் நம் இலக்கியத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது நன்றாயிருக்கும். இதுவரையிலும் நாம் ஒருவாறு வசன நூல்களைப்பற்றிப் பேசினோம். இனி,

## செய்யுளாலாக்கப்பட்ட சிறிய நூல்கள்

நமக்கு அவசியமா என்பதைக் கவனித்தல் வேண்டும். பாட்டுப் பாடுவதால் நமக்குப்பயனொன்று மில்லையெனப் பறையடிக்கிறார்கள் அனேகர். இது தப்பான கொள்கை. இகசுகத்திற்கும் பரசுகத்திற்கும் இனியதொருசாதகமாய் நம்மை மேலும் மேலும் உன்னத நிலைமைக்குக் கொண்டுபோய் உய்யச்செய்வது உறுதியுள்ள பாட்டாகும். காலத்திற்கியையப் புதுவர்ணனைகளடங்கிய கவிகளும் நாடகக்கவிகளும் நமக்கு இப்போது அவசியமானவை. கவித்திறம் நம்மைவிட்டு நீங்கினால் நம்கௌரவத்திற் பாதி குறைந்து விடுமென்றெண்ணவேண்டும் "இயற்கைத் தத்துவத்தையும் ஆத்துமதத்துவத்தையும் ஊன்றநோக்கி ஆன்றமனதையுடையவர்கள் அருங்கவிப்புலவர்கள். உம்முடைய ஆழமில்லாத அறிவைக்கொண்டு கவிவாணருடைய மனதைக்கிலேசப்படுத்த வேண்டாம். கவிவாணருடைய மனதாழத்தைக் கண்டுபிடிக்க நும்மாலாகாது; ஆதலின் அவர்மனதைநோகச் செய்யவேண்டாம்" என்று டென்னிசன் கூறுகிறார்.

இத்தகைய அருமையான ஆபரணத்தை நாம் இழந்துவிடுவோமானால், கேவலம் மிருகங்களுக்குச் சமானமாய் எண்ணப்படுவோம் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. மேலே பலவிதமாகக்காட்டிய நலமுள்ள வழிகட்கெல்லாம் ஏற்பதாகக் கொள்ளக்கூடிய

## முடிவுரை

யாதெனில், காலத்தை நோக்கி இலக்கணம் மாறுமென்பதும், காலத்தைநோக்கிப் புதிய கருத்துக்களை நம்இலக்கியத்தில் அமைக்க வேண்டுமென்பதுந்தான். இவ்வாறு செய்வதில் நம்தமிழ்ப்பண்டிதர்களும் ஆங்கிலமுந் தமிழுங் கற்றோர்களும் ஒருவரையொருவர் அசட்டை செய்யாது, பண்டித சிகாமணிகள் தொன்னூலாராய்ச்சியால் நமக்குப் பயன்விளைக்கவும் ஆங்கிலமுந் தமிழும் பயின்றோர் புதுக் கருத்துக்களைப் புது இலக்கியங்களில் புகுத்தவும் ஒருவர்க்கொரு

வர் பரஸ்பரம் ஸ்நேக பாவத்தோடும் நடந்துவந்தால், இன்னும் சின்னாட்களில் நமது இலக்கியம் வெகுவாய் விர்த்தியடையும். அப்பொழுது, எற்கவே அற்புதமான பொற்பினையுடைய அழகிய நமது நந்தனவனத்தில் இப்போது நடப்போர் காலிற் கடிப்போமென்று இறைபட்டுக் கிடக்கும் முட்களெடுபட்டுப்போகும். திருத்தமான பாஷைகளும் பொருத்தமான விநோதங்களும் எங்கு பார்த்தாலும் இங்கிதம் கொடுக்கும். ஒருபுறம் குயில்கள் பாடவும் ஒருபுறம் மயில்களாடவும், பைஞைக்குருவிகளும் நைடிங்கேல்களும் இனிய குரலால் மதுரம்பயக்கவும், இலந்தையும் திராட்சையும் * கௌஸ்லிப்களும் டாப்போடில்களும் லிலிக்களும் ரோஜாக்களுமாக நமது பூங்கா ஒங்குவதைக்கண்டு அனைவர் மனத்திலும் ஆனந்தமுண்டாகும்.

---

* Cowslip † Daffodil ‡ Lily

# SHADAGOPA THE SAINT.

## ஸ்ரீ சடகோபப் பிரான்.

மூலையிலிருந்த என்னை முற்றத்திலிழுத்து விட்டீர்கள்! பேச்சுப்பேச்சென்னும் பெரும்பூனைகள் முன் கீச்சுக் கீச்சென்னும் கிளி போல்வனாகிய என்னை, பாச்சி, சோச்சி என்று ஏதோ சில பல பேசச்சொன்னீர்கள்! குருவியின் தலையில் பனங்காயைக் கட்டுவதுபோல் என் தலையில் சடகோபனைக் கட்டினீர்கள்! என் அறியாமை எவ்வளவுதூரம் செல்கின்றது, என் அஞ்ஞானம் எத்துணை வரம்பு கடந்திருக்கின்றது, என் துடிதுடிப்பும் பதைபதைப்பும் ஆத்திரமும் அவசரமும் எவ்வாறு என்னை ஆட்டி அல்லல் விளைக்கின்றன என்று குருவியின்மீது ராமசரம் தொடுப்பதுபோல் ஆய்ந்து பார்க்கிறீர்கள். கல்விக்கடலைக் சடந்தவர்கள நீங்கள்: காணக்காணக் கருதித்தேரத் தெளிய விரும்பிக் காதம் நடந்து காலோய்ந்தவன் யான். ஞானக்கொடியை நாட்டினவர்கள் நீங்கள்: ஊனக்கண்ணோடு உழல்கின்றவன் யான். பக்திக்கடலில் தெப்பமிடுபவர்கள் நீங்கள்: சஞ்சலக்காட்டில் அஞ்சியும் அயர்ந்தும் சஞ்சரிப்பவன் யான். இவ்விதம் ஒற்றுமையில்லாமல் சித்தங் கலங்கிய என்னைச் சற்றாயினும் பேசவேண்டுமென்றதால் பித்தன்போல் தோன்றினவற்றைச்சொல்லுகின்றேன். பித்தர் சொன்னவும்பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ என்கிறபடி, என்னைக் கோபியாது என் அறியாமையைக் கவனியாது என்னைக் காத்துக் கடாக்ஷிப்பீர்களென்று மிகவும் பிரார்த்திக்கிறேன்.

கல்விகரையில, கற்பவர் நாள் சில என்று மூதறிவாளர் முன்னமே கூறியுள்ளார். கல்விக்குக் கரையில்லையாயின் கல்வியைக் கடந்த கற்பகமாகிய பொற்பினையுடையவரும் மடவாதியரைக் கடியும் சடகோபப் பிரானும் ஆகிய என்னையாளும் எம்மான் பெருமைக்கு எல்லையும் முடிவும் எப்படித்தோன்றும்? ஆயினும்இங்கு நேர்ந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கும் இங்கு எனக்குக்கொடுப்பதாய் யான் கொண்டிருக்கும் சிலநிமிஷங்களுக்கும் ஏற்றபடிக்கும் இயைந்த படிக்கும், சிலவற்றை மாத்திரம் சொல்லித் தற்காலம் முடித்துவிடுகிறேன்.

பிரபஞ்சத்தை நாம் நோக்கும்போது சித்தும் அசித்தும், ஆத்மாவும் சடமும், உயிரும் உடலும் என்று அது இருவகைப் படுவ

தாய்க் காண்கிறோம். இதையே ஆங்கிலர்கள் பிரபஞ்சம் அல்லது உலகத்தின் இருவகைப் பிரிவு என்று கூறுகிறார்கள். இதற்கிணங் கக் கல்வியுலகத்தில் கணநேரம் நாம் உற்றுப்பார்ப்போமாயின் அது பத்யம் கத்யம், பாட்டு வசனம் என்னும் இரண்டு விதமாய் வகுக்கப்படு மென்று நமக்குத் தெரிகின்றது. வசனத்திற்குச் சடத் தையும் பாட்டிற்கு ஆத்மாவையும் உபமானமாகக் கொள்ளலா கும். வசனமானது கேவலம் உலக விஷயங்களுக்கு ஒத்தது: பாட் டென்பது உலக விஷயங்களி னின்றும் ஒருவனை உயரத்தூக்கிப் பறப்பது. வசனம் என்பதைக் கட்டை வண்டிக்குச் சமமாய்ச் சொன்னால் பாட்டு என்பதைப் பாய்க்கப்பலுக்குச்சமமாகச் சொல் லலாம், அல்லாவிடில் பலூன் என்னும் ஆகாய ரதத்திற்கு ஒப் பாகச் சொல்லலாம். வசனமானது வாளுளை வீணாக்காது பயன் படுத்தியபோதிலும் பரமபதத்திற்கு வழிகாட்டும் பாங்குள்ள கருவி பாட்டேயாகும். இது பற்றித்தான் பக்தர்களனைவரும் பாடிப் பாடிப்பலன் பெற்றார்கள்; நாமும் பாடிப்பாடி பரவசமாகச் செய் தார்கள். லௌகிக விஷயங்களுக்குப் பொருந்தியது வசனமாகும்: லௌகிக விஷயங்களை வைதிக தத்துவ நெறிகளிற்காட்ட வேண்டு மானாலும் சரி, பரம பக்தியிற் படிந்து பகவானைப் பஜிக்கவேண்டு மானாலும் சரி, அவை பாட்டாலே யாகுமேயன்றி வசனத்தா லாக வேயாகாது, ஆதலால், பாட்டால் பலனில்லை என்னும் வாக்கியத் தை நாம் ஒப்பமாட்டோம். முன்னொருக்கால், பாட்டு என்பதைப் பற்றி யானெழுதிய சில வாக்கியங்களை இங்கு வாசிப்பது அவசிய மாக எனக்குத் தோன்றுகிறது.

"உபயோகமில்லாதபொருள் உலகத்திற் கிடையாது. உள்ளத் தையுயர்த்தியும் கள்ளத்தை விலக்கியும் நாணயம் விளைக்கும் நல்லி சைப்பாட்டால் எல்லாச் சீருந் தோன்றுமேயன்றிப் பயனற்றுப் போவது யாங்ஙனம்? நாட்டோர் புகழும் பாட்டரசே! உன் நளினத் திருவழகை நானெடுத் துரைக்கலாகாது! திருவாய்மொழிப் பண்டி தன் கண்ட ஒருவாய் மொழி விளக்கே! நாவரசன் விரும்பிய பாவ ரசே! கம்பன் விரும்பிய செம்பொன்னே! உன் அற்புதத் தகைமை யும் பொற்பின் பெருமையும் யாவர் கூறத்தரம்! நீ நின்ற நிலையிலி ருந்தே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து விண்மீன்களிலுண் மீனென விளங்கி அவைகளுடன் அளவளாவி முகமன் பேசியும்

ஆங்கிருந்து மிழிந்து பாதாளத்தின் பண்பினை யறிந்து, பூமியிற்றங்
கிப் புத்தமுதுண்டாலென மெத்த மகிழ்ந்து மெல்லிய பூக்களில்
உல்லாசமாய்ப் படிந்தும் கடுகிய காற்றில் முடுகிநடந்தும் ஆற்றிலுங்
குளத்திலும், அருவியிலும் கடலிலும், மலையிலும் குகையிலும், காட்
டிலும் மேட்டிலும், அங்கு மிங்கு மெங்கும் பரவிக் காணும்பொ
ருளைக் கண்டுபிடித்து அனைவரும் உள்ளங் குளிர வுரோமஞ்சிலிர்ப்
ப மெய்ம்மறந்து மேன்மையே நோக்கச் செய்த நினது வன்மை
செப்பவுங் கூடுமோ, நினது எழிலை இசைக்கவும் ஆகுமோ! எழுத்
தெண்ணிச்சீர்பிரித்துத் தளையறுத்து எதுகை மோனையும் கடினப
தங்களும் சேர்வதாலேயே நேர்வதின்றிக் கற்பனையும் சொற்சுவை
யும் கலந்த விடத்தே யிலங்கிநின்று காதல் விளைத்துக் கருணைபுரி
யும் கற்பகமே, பொற்புகழே! ஒரோவேளை, வீராவேசத்துடன்
வீறுகாணப் பேசியும் மற்றோர் வேளை, மெல்லிய வீணையிற் சில்
லென வொலித்தும் தீங்குழலதனிற் பாங்குறப் பயின்றும் கம்
பீரந் தோன்றக் கண்டத்தான் மிழற்றியும், பற்பலவகையால் அற்
புதம்புரிந்து சங்கீதந்தன்னி லிங்கிதம் காட்டிய சிங்காரப்புலவன் நீ!
ஆனந்தம் காட்டி வானந்தம் விளக்கிய அரும்பெரும்புலவ! உன்
மனதாழங் கண்டுபிடிக்க மனிதராலாகாது. கடலின் கருமையுங்
காலத்தொடர்ச்சியும் எவ்வாறு, கங்கு கரையின்றி தங்குதடையின்
றி நோக்க நோக்கப் பின்னும் பின்னும் வளர்ந்து செல்கின்ற
னவோ, அவ்வாறே, உன்மனமாட்சியும் கணிப்பருங் காட்சியும்
மனோகரமாயும் மனோதீதமாயும் விளங்குகின்றன."

ஆங்கிலேயருக்குள் மஹா மேதாவிகளாகிய ஷேக்ஸ்பியர்
டென்னிஸன் என்பவர்கள் பாட்டின் பெருமையைப்பற்றியும்
உண்மைக் கவிகளின் உயர்வைப்பற்றியும் மிகவும் சாதுர்யமாயும்
சமஸயம் அறும்படியாகவும்பேசியிருக்கிறார்கள். "ஏ! அஞ்ஞானத்தி
லழுந்திக் கிடக்கும் அறிவிலியாகிய மனிதனே! நீபாவலருடைய
மனதைக் கஷ்டப்படுத்தாதே! உன்னுடையஆழமில்லாத அறிவைக்
கொண்டு உண்மைக்கவிகளின் உள்ளத்தை வருத்தாதே! அவர்களு
டைய மனதாழத்தைக் கண்டுபிடிக்க உன்னாலாகாதானபடியால்
அவர்கள் மனதை அனாவசியமாய் வருத்தாதே" என்று டென்னி
ஸன் கூறுகிறார்.

இத்தகைய உண்மைப்பாக்களால் உத்தமனைப்பாடியவரே சட
கோபர். அவருடைய ஞானபக்தியின் விசேஷமும், உணர்ந்துணர்ந்

து உருகி உருகி நெஞ்சுலரவும் கண்பனிக்கவும் கண்ணனைப்பாடும் வண்மையும் யாவரால் அளவிடுதற்கு முடியும்? ஞானம் வேண்டுவோர்க்கு நல்ல நிதியாகவும், பக்திபைக் கோருவோர்க்குப் பரம பொக்கிஷமாகவும் விளங்குவது அவரியற்றிய திருவாய்மொழி. எழுத்துக்களைச்சேர்த்து அசையாக்கி அசைகளைச்சேர்த்துச்சீராக்கி, இலக்கணம் மாத்திரம் தவறாது இலக்ஷணம் மாத்திரம் காணாது, உள்ளுணர்ச்சியென்பதோ சிறிதுமில்லாது, உவமையென்பதோ ஒரு மூலையிலும் விளங்காது, கொல்லத்துக்காரன் மட்டப்பலகையைக் கொண்டு குட்டிச்சுவரைக் கட்டுவதுபோல் சட்ட திட்டத்துடன் இக்காலத்தில் சிலர் எட்டுச்சீரும் பத்துச்சீரும் பாடுவதுபோல் அவர் பாடவில்லை. அபிப்பிராயத்திலும் அழகிய கீதமிருக்கவேண்டும், சொற்களும் சுவையுடையவைகளாயிருக்க வேண்டும், இந்த இரண்டுமில்லாதவர்கள் பாடுவதற்கு உரியவர்களல்லர் என்று கார்லைல் என்னும் ஆங்கிலப்பெரியோர் கூறியபடி, உள்ளுணர்ச்சிப்பெருக்கத்தாலும், சொல்வன்மை அழுத்தத்தாலும் நம்மாழ்வார்க்கு மிஞ்சினவர் நானிலத்தில் கிடையார். அபிப்பிராயத்தை வலிவுறுத்த வேண்டுமாயின் ஆங்கில இலக்கணத்தையும் அறுத்துக்கிழித்து இரட்டைக் கம்பாரடிவ்களும் இரட்டைச்சூப்பர்லெடிவ்களும் உபயோகித்தார் மேற்கூறிய கார்லைல் என்னும் மேதாவியார். நம்முடைய ஆழ்வார், அபிப்பிராயத்தை வலிவுறுத்தவும் கொள்கையை நிலையுறுத்தவும் வேண்டியதாயின் சொற்களை யடுக்குவதிலும் திருப்பித்திருப்பிச்சொல்வதிலும் பன்னிப்பன்னிப் பாடுவதிலும் இளைத்துச் சளைக்கமாட்டார். திருஷ்டாந்தமாக,

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துருவி
　　யந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலு மிறைநிலை
　　யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய
　　னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
　　மனப்பட்ட தொன்றே.

எய்த்தா ரெய்த்தா ரெய்த்தாரே-முதலிய வாக்கியங்களைக்கொள்ளலாம். நம்மாழ்வார் பாட்டில் சீரொழுங்கில்லை யென்றும், தளை வன்மையில்லை யென்றும், அநேகம் பாட்டுகளைச் சீர்பிரித்துத் தளை

யறுத்து Scanning என்கிற அலகிடும்போது அவை இன்னவிருத்தம் இன்னதுறை என்று சுலுவில் சொல்ல ஆகவில்லை யென்றும் அநேக சரமகவிப் புலவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன்; அவ்வாறு எழுதியும் விட்டார்களோ அது எனக்குத்தெரியாது. பெரியாழ்வார் பாடல்கள் மீதும் இவ்வித குறைகள் சொல்லக்கேட் டிருக்கிறேன். முன் சொன்னபடி சிலர் மட்டப்பலகையால் திட்டப்படுத்தி அளவு நாடாவா லளந்து பாட்டைப்பாடி வாட்டப்பட்டவர்கள் போலல்லர் இவர்கள். மனிதனுக்காக இலக்கணம் செய்யப்பட்டதே யொழிய இலக்கணத்திற்காக மனிதர்கள் செய்யப்பட்டவர்களல்லர் என்பதை நன்றாயறிந்த மஹாத்மாக்கள் இவர்கள். மிஸ்ரஸ் ப்ரௌனிங் என்பவர்க்கும் பதினாயிரம் பங்கு மிஞ்சும்படி உணர்ச்சி ததும்ப, உவமையும் பிரிவாற்றாமையும் பொங்கிப்பெருக, காதல் மிகுந்து கண்ணீர் விளைக்கப் பாடிப்பரவசமானவர் பராங்குசர்! ஷேக்ஸ்பியர் என்னும் நாடகக் கவிபோல் ஆனந்தக் களிப்பாலும் திக்க விளைவாலும் பதங்களின் கோவையிலும் இலக்கணமுடிபிலும் பிறழ்தலிலும் அடிநீண்டு குறுகலிலும் மனநிலைமையைப் புலப்படுத்தினவர் நம்மாழ்வார். இவருடைய பக்தியேபக்தி, இவருடைய பாடல்களே பாடல்கள், இவருடையசொல்வன்மையே வன்மை. கவிச் சக்ரவர்த்தியாராகிய கம்பர் இவருடைய மேன்மைகளனைத்தையும் தமது சடகோப ரந்தாதியில் விவரமாகக் கூறியிருக்கிறார்.

தேவிற்சிறந்த திருமாற்குத்தக்க தெய்வக்கவிஞன்
பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர்பண்டிதனை
நாவிற்சிறந்த அம்மாறற்குத் தக்க நன்னாவலன்
பூவிற்சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே

என்னும் பாடலே இதற்குப் போதிய சாட்சியாகும்.

என்னுடைய இளமைப் பருவத்தில், நம்மாழ்வார் பாட்டென்றால் நாத்தித்திப்பதுகிடையாது. என்ன! வாளைபாயவில்லையே, தேங்காய் வீழவில்லையே, நெல்லிற் குவளை கண் காட்டவில்லையே, நீரில் குமுதம் வாய் காட்டவில்லையே; நன்றாகவில்லை, வேடிக்கையாகவில்லை என்று நினைப்பதுண்டு. பின்னர் நாளேற நாளேற வைகாஜி என்கிற மனைதத்தில சாஸ்திரப்பயிற்சியும் பக்தியின் தன்மையும் சிறிது தெரியத் தெரிய, திருவாய் மொழியின் மேன்மையும் மாட்சியும் மேலும் மேலும் புலப்பட்டுக்கொண்டுவந்தன.

அக்காலே, ஹா என்ன ஆச்சர்யம்! நம்மாழ்வாருடைய நாதமும் கீதமும் வேதமும் காதிற்பட்டன! உள்ளங் குளிர்ந்தது, உடலம் பூரித்தது. பஞ்சபூத உலகத்தில் பாதகக்கூட்டம் நடுவில்இருப்பதாய் யாதும் புலப்படவேயில்லே. "கரவிசும் பெரிவளிநீர் நில மிவை மிசை" முதலிய கம்பீரவார்த்தைகள் காததூரம் தூக்கிக்ககனத்திற் பறந்தன. அவைகள் சொற்களா என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்டேன். அல்ல. அவைகள் சொற்கள் அல்ல,வெறும்சொற்கள் அல்ல, உலக எண்ணத்தை ஒரு நிமிஷமாயினும் ஒழித்து விடுகின்றனவே! எவ்வளவு உன்னதமானசொற்களாயினும் அவைகள் புழுக்களேப்போல் நம்மைப் பூலோகத்தில் அழுத்துவனவே யன்றி கந்தருவர்களேப்போல் நம்மைக் ககனத்தில் தூக்காவே! இஃதென்ன விந்தை! அவைகள் சொற்கள் அல்ல, பளபளப்பான கற்களுமல்ல, அவை அமிர்தமா என்று சிந்தித்தேன். அமிர்தத்தில் ஒருவேளே சுவை யிருந்தபோதிலும், இவ்வளவு கம்பீரக்கட்டும் இசை நுட்பமும் அதனிடம் இல்லேயே என்று பற்பல வாறு சிந்தித்து வந்தித்து மேலும் மேலும் கேட்டேன். இலேதோறுமிருந்து ஈசன் கேட்டானென்பது மெய்யென்றுணர்ந்தேன். ஜேம்ஸ்என்பவரின் V. R. யில் இவ்வித தோற்றங்கள் உண்மையென்று சொல்வதைக்கொண்டு என் புத்தியில் ஊர்ஜிதப்படுத்திக்கொண்டேன்; கம்பீர வார்த்தையும் வேத விழுப்பமும் வேறெங்குங் காணக்கிடையா என்று கைவிட்டேன், இதை இனி நன்றாய் வாசித்தல் வேண்டும் என்று தலேப்பட்டேன், என் சிற்றறிவுக் கெட்டியவரையில் இதைப்பற்றி வியாசம் ஒன்று எழுதவேண்டுமென்று தொடங்கி இறகு தொட்டேன். திருவருள்கொண்டுதிருவாய்மொழிபாடிய குருபரா! கோதிலாக்குணக்குன்றே, நம்மனேரனேவரையும் வாழ்வித்த நவையிலா ஞானமே, ஆகாய வீதியில் அச்சுதன் விழாவுக்கு நாதப்பிரம்மமே வேதந்தன்னே ஓதிவந்தாற்போன்ற கம்பீரப்பொலிவும் சொற்சிறப்பும் பொருட்பெருக்கும் உத்தமக் கொள்கைகளும் உன்னத நிலேகளும் நன்றே விளங்க அன்றே புகன்ற அற்புதப்பெரியோய், ஞான தேசிகா, உன் பொன்னடி வாழ்க, பூங்கழல் வாழ்க, நன்மை பெருகும் நளினப்பதம் வாழ்க, வாழ்க வாழ்க நிலமிசை நீடு வாழ்க.